Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 383/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **கருப்பசாமி** |
| Father's Name | :: | **சங்கையா** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**19.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் விருதுநகர் தாலுகா பாலவநத்ததில் சிமெண்ட் கடை வைத்துள்ளேன். அசா.1 செல்வம் எனக்கு பழக்கமானவர். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் எனக்கு பழக்கமானவர். செல்வம் மற்றும் எதிரி ஆகிய இருவருக்குள்ளும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இருவருக்குள்ளும் ஏதோ பிரச்சனை என்று கேள்விபட்டேன். பிரச்சனை நடந்ததாக கூறும் சமயத்தில் நான் அவர்களுடன் இல்லை. வேலை நிமித்தமாக வெளியே சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடமும் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று தான் கூறினேன்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பாலநத்தம் கிராமத்தில் கருப்பன் ஏஜென்சி என்ற பெயரில்

கடை வைத்து நடத்தி வருவதாகவும், ஆஜர் எதிரி சக்கரவர்த்திக்கும், அசா.1 செல்வத்திற்கும் இடையே தொழில் ரீதியாக விரோதம் இருந்து வருவதாகவும், இந்நிலையில் கடந்த 14.03.2024 ம் தேதி அசா.1 செல்வம் எனது கடையில் சிமெண்ட் மற்றும் கடப்பா கல் ஏற்றி கொண்டிருந்ததாகவும், நான் அவரிடம் மாசான கருப்பசாமி, பத்ரகாளியம்மன் கோவில் நிர்வாகிகள் செல் நம்பர் இருந்தால் என்று கேட்டபோது அசா.1 சங்கர் என்பவரின் நம்பரை கொடுத்ததாகவும், அதன் பிறகு காலை சுமார் 09.30 மணியளவில் எங்கள் கடைக்கு வந்த எதிரி லோடு ஏற்றி கொண்டிருந்த அசா.1 ஐ இந்த தேவிடியா மகன் தானே போன் நம்பரை கொடுத்தான் என்று அசிங்கமாக திட்டி கீழே தள்ளிவிட்டதில் அசா.1 அங்கிருந்த சைக்களிலில் விழுந்து இடது பக்க பின் தலையில் ரத்தகாயமும், வலது பக்க பின் தலையில் வீக்க காயம் ஏற்பட்டதாகவும் அப்போது அங்கிருந்த நான் மற்றும் சிலர் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டதாகவும், எதிரி அசா.1 ஐ பார்த்து எங்க பிரச்சனையில் தலையிட்ட நீ உயிரோடு இருக்க மாட்ட என்று கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும் நடந்த சம்பவம் சம்மந்தமாக அசா.1 புகார் மனு கொடுத்ததாகவும், போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**
**இல்லை**